Dt. Next
Dated: 14.12.2024

## Go to same bench that denied ballots with EVM plea: SC

NEW DELHI: The Supreme Court on Friday said the plea seeking a policy for verification of electronic voting machines should go before the same bench that delivered a verdict in April rejecting the demand for bringing back the old paper ballots. When the plea on EVMs came up for hearing, a bench of Justices Vikram Nath and PB Varale told petitioner's counsel senior advocate Gopal Sankaranarayanan, "Why don't this matter go before the same bench?" Sankaranarayanan informed the court about its April judgment on pleas over EVMs. The verdict on April said the suspicion of manipulation of the EVMs "unfounded" and the polling devices were "secured" and eliminated booth and bogus voting.

Deccan Chronicle
Dated: 14.12.2024

# 'EVM issue should go to same bench'

**DC CORRESPONDENT**
**NEW DELHI, DEC. 13**



The Supreme Court on Friday said the plea seeking a policy for the verification of electronic voting machines (EVMs) should go before the same bench that delivered a verdict in April rejecting the demand for bringing back the old paper ballots.

"Why don't this matter go before the same bench?" a bench of Justices Vikram Nath and P.B. Varale told petitioner's counsel Gopal Sankaranarayanan. Mr Sankaranarayanan informed the court about its April judgment on a batch of pleas over EVMs.

"That is what I am saying. It (plea) should go before the same bench," Justice Nath reiterated.

"To our understanding, the relief claimed by means of this petition under Article 32 of the Constitution of India would require interpretation/modification/implementation of the directions issued by this court vide judgement dated April 26, 2024 ...," the SC said.

In its verdict on April 26, the SC termed the suspicion of manipulation of the EVMs "unfounded" and said the polling devices were "secured", and eliminated booth capturing and bogus voting.

The top court, however, opened a window for the aggrieved unsuccessful candidates securing second and third places in poll results.

Daily Thanthi
Dated: 4.12.2024

## ஈரோடு கிழக்கு தொகுதிக்கு மீண்டும் இடைத்தேர்தல்

2021-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளில் 159 இடங்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றியது. அ.தி.மு.க. கூட்டணி 75 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற காங்கிரஸ், போட்டியிட்ட 25 தொகுதிகளில் 18 இடங்களில் வெற்றி பெற்றது. இதில் ஈரோடு கிழக்கு தொகுதியில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் மகன் திருமகன் ஈவெரா வெற்றி பெற்று முதன் முறையாக சட்டமன்றத்துக்குள் நுழைந்தார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு ஜனவரி 4-ந்தேதி திருமகன் ஈவெரா மாரடைப்பு காரணமாக உயிரிழந்ததை தொடர்ந்து, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

கூட்டணி தர்மத்தின் அடிப்படையில் ஈரோடு கிழக்கு தொகுதியில் மீண்டும் காங்கிரஸ் கட்சியே போட்டியிடும் என தி.மு.க. தலைமை அறிவித்தது. அதன்படி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.எல்.ஏ. ஆனார். 30 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் எம்.எல்.ஏ.வாக சட்டமன்றத்தில் நுழைந்தார்.

தற்போது ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மரணம் அடைந்ததை தொடர்ந்து, ஈரோடு கிழக்கு தொகுதியில் மீண்டும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. ஈரோடு கிழக்கு தொகுதியை காலியானதாக சட்டமன்ற செயலாளர் அறிவித்தவுடன், இந்த தகவல் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்படும். இதையடுத்து இடைத்தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கும்.

ஏற்கனவே காலியாக உள்ள சட்டசபை தொகுதிகள் அல்லது பிற மாநில சட்டசபை தேர்தல்களோடு இடைத்தேர்தலும் அறிவிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

அந்தவகையில் ஒரே ஆட்சி காலத்தில் 2 முறை இடைத்தேர்தலை ஈரோடு கிழக்கு தொகுதி சந்திக்க இருக்கிறது. வாக்காளர்கள் 3-வது முறையாக வாக்களிக்க போகிறார்கள்.

The Hindu (Tamil)
Dated: 16.12.2024

நாடாளுமன்றத்தில் இன்று தாக்கலாக இருந்த

## ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ மசோதா தள்ளிவைப்பு

புதுடெல்லி

நாடாளுமன்றத்தில் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ மசோதா தாக்கல் செய்யப்படுவதை மத்திய அரசு தள்ளிவைத்துள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 4-ம் தேதி தொடங்கி, வரும் 20-ம் தேதி வரை நடைபெறுகிறது. கூட்டம் தொடங்கியதில் இருந்தே அதானி விவகாரம், சம்பல் வன்முறை, மணிப்பூர் விவகாரம் குறித்து அவையில் விவாதம் நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. அதன் பிறகு நடைபெற்ற கூட்டங்களில், இந்தியாவுக்கு எதிராக செயல்படும் சர்வதேச புலனாய்வு ஊடக அமைப்புக்கு (ஓசிசிஆர்பி) நிதியுதவி அளிக்கும் அமெரிக்க தொழிலதிபர் ஜார்ஜ் சோரஸுடன் நேரு குடும்பத்துக்கு நீண்டகால உறவு இருப்பதாக காங்கிரஸ் மீது பாஜக குற்றம் சாட்டியது. இதனால் நாடாளுமன்றத்தில் அமளி நீடித்தது.

இதற்கிடையே, ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை கடந்த 12-ம் தேதி ஒப்புதல் அளித்தது. நாடாளுமன்றத்தில் இந்த மசோதா விரைவில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

### எம்.பி.க்களுக்கு மசோதா நகல்

மக்களவையில் ஒரேநாடு, ஒரே தேர்தல் மசோதாவை மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் டிசம்பர் 16-ம் தேதி (இன்று) தாக்கல் செய்வார் என முதலில் அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற நடைமுறைப்படி, எம்.பி.க்களுக்கு இந்த மசோதாக்களின் நகல் கடந்த வாரம் வழங்கப்பட்டன. இந்த நிலையில், நாடாளுமன்ற அலுவல் தொடர்பாக மாற்றியமைக்கப்பட்ட பட்டியலை மக்களவை செயலகம் வெளியிட்டுள்ளது.

அதில், ‘துணை மானிய கோரிக்கைகள் குறித்து மக்களவையில் 16-ம் தேதி (இன்று) விவாதிக்கப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. துணை மானிய கோரிக்கைகள் நிறைவேறிய பிறகு, இந்த வாரத்தில் ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா தாக்கல் செய்யப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மசோதா தாக்கல் தள்ளிவைக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை.